IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அயோத்திதாச பண்டிதரின் பௌத்த சமய உருவாக்கம்

வே. சாந்தலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை-15

**முன்னுரை:**

பண்டிதர் அயோத்திதாசரின் பௌத்த உருவாக்கம் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க சமூக விடுதலை எழுச்சிக்கு காரணமான மிக முக்கிய செயல்பாடாகும். அவர் வாழ்ந்த 19, 20 ஆம் நூற்றாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க காலக்கட்டமாகும். இவர் தலை சிறந்த சிந்தனையாளர், தமிழ் இலக்கிய அறிஞர், சாதி – சமயச் சடங்குகளை நீக்கிய சமூகநீதி செயற்பாட்டாளர், பகுத்தறிவுச் சிந்தனையாளர் என பல பொருண்மைகளின் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். இந்த நிலையில் சாதியில் தமிழ்ச் சமூகம் முடங்கியும், அடிமைப்பட்டும் கிடந்த நிலையில் அயோத்திதாசர் பண்டிதரின் சிந்தனைகளும், செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. அவரது மறைவுக்கும் பிறகுதான் தமிழ்ச் சமூகம் அவரைக் குறித்து அறிந்து கொள்கிறது. எனவே, அயோத்திதாசப் பண்டிதர் என்ற பகுத்தறிவின் தந்தையை நாம் அனைவரும் கொண்டாட வேண்டிய காலம் இது. இந்தியாவில் அடித்தட்டு மக்களின் உரிமைக்காகப் போராடியவர் புரட்சியாளர் அம்பேத்தகர். ஆனால் அம்பேத்கருக்கு முன்பே தோன்றியவர் அயோத்திதாசர் பண்டிதர் பெரியார் பிறப்பதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பே பகுத்தறிவுச் சிந்தனைகளை விதைத்தவர். மகாராஷ்டிரா மாநிலத்தில் மகாத்மா புலே அடித்தட்டு மக்களின் கல்விக்கு எப்படி வித்திட்டாரோ அதேபோல் சென்னை மாகாணத்தில் அடித்தட்டு மக்களின் சமூக பண்பாட்டு

விழிப்புணர்வுக்கும், கல்விக்கும் மாபெரும் மாற்றங்கள் நிகழ்வதற்கு வித்திட்டவர் காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் ஆவார். இதன் வழியாக, கட்டுரையில் தாசரின் தமிழ் பௌத்த நிலைப்பாட்டையும் அதன் மூலம் தமிழ்ச் சமூகத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தையும், பௌத்த சிந்தனைகளையும் பண்டிதரின் எழுத்தின் ஊடாக விரிவாக விளக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

இந்தியாவில் அடித்தள மக்கள் விடுதலையடைய அம்பேத்கரின் பௌத்த சமயப் புரட்சிவழி வகுத்தது. இதற்கு அயோத்திதாசப் பண்டிதரின் தமிழ்ப் பௌத்தம் முன்னோடியாக இருந்தது என்றால் மிகையில்லை. தாசர் தமிழகத்தில் அடித்தட்டு மக்களின் அரசியல் மற்றும் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராக இருந்தவர். தமிழர்களுக்கு சுயமரியாதைச் சிந்தனைகளையும், பகுத்தறிவு கொள்கைகளையும் அளித்தவர். தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படைத்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்தில் மாற்றம் காண அனைவருக்கும் கல்வியையும், பெண் கல்வியையும் கொண்டு வந்தவர். எனவே பண்டிதரின் வாழ்க்கையையும், இலக்கிய பணிகளையும் சமூக நோக்கில் ஆராய்வது தேவையாக இருக்கின்றது.

**பண்டிதர் அயோத்திதாசரின் சமூக, அரசியல் பணி**

தமிழ் சிந்தனை மரபில் மாபெரும் சிந்தனையாளராக போற்றப்பட வேண்டியவர் பண்டிதர் அயோத்திதாசர் (1845-1914) ஆவார். தென்னகத்தில் புத்தம் மறுமலர்ச்சியடைய காரணமாய் அமைந்தவர். மனித விரோத சாதி, மதம், தீண்டாமை இவற்றிற்கு எதிராய் மிகத் தீவிரமாய் போராடியவர். அவர் நடத்திய போர் அறிவு சார்ந்தது. 1870 களிலேயே தொடங்கிய அவரது அரசியல் வாழ்வு அடித்தள மக்கள் பற்றிய கண்ணோட்டத்திலும், தமிழ் வரலாறு பற்றிய எண்ணத்திலும் புதிய ஒளியினைப் பாய்ச்சுவதாக மாறியது. தொடக்கத்தில் அத்வைதானந்த சபையையும், திராவிட பாண்டியன் ஏட்டினையும் துவங்கிச் செயல்பட்டார். அத்வைதானந்த சபையின் மூலம் மக்களிடையே சாதிபேத உணர்வுகள் ஒழிக்க முற்பட்டதுடன் மருத்துவப் பணிகளையும் செய்து வந்தார். 1894ல் பௌத்த சமயத்தை அடித்தள மக்களின் பூர்வ சமயம் என்று கண்டறிந்தது முதல் 1907இல் இருந்து 1914 வரை ஏழாண்டுகள் “தமிழன்” என்னும் வார இதழைத்

தொடர்ந்து நடத்தித் தன் தீவிரமான கருத்துக்களை அதன் மூலம் முன்வைத்து வந்தார். காலனி ஆதிக்கத்தின் கீழ் இந்து அடையாளமும் தமிழ் அடையாளமும் நவீன அரசியல் சூழலுக்கேற்ப உருப் பெளத்தம் தொடங்கிய போது அயோத்திதாசரின் செயற்பாடு தொடங்கியது.

(வரலாற்றை மொழிதல், ஸ்டாலின் ராஜாங்கம் ப-35)

பண்டிதரின் சமூக, அரசியல் செயல்பாட்டிற்கு பெளத்தம் உள்ளூள கைகொடுத்தது. பண்டிதரின் காலகட்டத்தை R. சுந்தரலிங்கம் படித்த பட்டதாரிகளின் சங்கங்களின் காலம் என்றே வருணிப்பார். ( R. Sundaralingam: (1974) 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொன்னிந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் ஆங்கிலம் படித்தவர்கள் அடர்த்தியாக வாழ்ந்த இடங்களில் ஒரு இலக்கிய சங்கமோ, ஒரு விவாத சங்கமோ இருந்தது. இக்கால கட்டத்தில் சமூக சமய சீர்திருத்தத்தில் பங்குபெற்ற 'சொசைட்டிகளில்'' 'தியோசபிகல் சொசைட்டி' குறிப்பிடத்தக்கது. பண்டிதரின் வாழ்க்கையில் இதற்கு முக்கிய பங்கு உண்டு. 1882-ல் பம்பாயிலிருந்து தியோசபிகல் சொசைட்டி சென்னை அடையாருக்கு இடம் பெயர்ந்தது. இச்சபை பஞ்சமர் சிறுவர்களுக்குக் கல்விக் கண்ணை திறந்தது. அயோத்திதாசர் லட்சுமிநரசு முதலான மாற்றுச் சிந்தனை செயல் வீரர்களுக்கு உறுதுணையாக இருந்தது. பஞ்சமர் பள்ளிகளை கர்னல் ஆல்காட்டின் உதவியுடன் வேளாளத் தேனாம்பேட்டை, மயிலாப்பூர், கோடம்பாக்கம் ஆகிய இடங்களில் பண்டிதர் நடத்தினார். பண்டிதரின் இச்செயல்பாடு மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பெரும் உத்வேகத்தை அளித்தது. ஆல்காட்டுடனான தொடர்பு பண்டிதரின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**பெளத்த சமயத்தில் அயோத்தி தாசர்**

அயோத்திதாசர் பெளத்த சமயத்தில் சேர்ந்ததை ஆல்காட் தமது நாள் குறிப்பீட்டில் கறிப்பிட்டுள்ளார். ஆல்காட் உதவியுடன் பண்டிதர் பெளத்தரானார். 1998இல் பண்டிதர் பி. கிருஷ்ணசாமி ஆகியோரை அழைத்துக்கொண்டு ஆல்காட் இலங்கை புறப்பட்டார். கொழும்பில் சுமங்கலா என்னும் பெளத்த சமய குருமார் பெளத்த சமய தீட்சையை அளித்தார். பெளத்த சமய

குருமார்களான தம்மபாலருழ் குணரத்னே என்னும் சிங்களர்களும் அயோத்திதாசரின் முயற்சிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி வந்துள்ளனர்.

(பெ.சு. மணியின் கட்டுரைக் கொத்த., I, ப-243)

இலங்கை சென்று பஞ்சசீலம் பெற்று திரும்பியது முதலே, அயோத்திதாசர் பௌத்தத்தை எல்லாவகையிலும் அடித்தள மக்களின் தனிப்பெரும் அடையாளமாக மாற்றத் தொடங்கினார். முதலாவதாக 'புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். அவர் ஏற்படுத்தவிருந்த பௌத்த சங்கங்களுக்கான அடிப்படை நியாயங்களைச் சொல்லுவதாக, வழிகாட்டி நூலாகக் கருதி அதனை அவர் வெளியிட்டிருக்க வேண்டும். 1898-இல் பண்டிதர் 'தென்னிந்திய சாக்கைய புத்த சங்கம்' நிறுவினார். பௌத்த சமயத்தத்துவங்கள் இந்தச் சங்கத்தில் விளக்கப்பட்டன. பெங்களூர், கோலார் தங்கவயல், திருப்பத்தூர், செகந்திராபாத், ரங்கூன் ஆகிய ஊர்களில் இச்சங்கத்திற்குக் கிளைகள் தோன்றின. இச்சங்கத்தின் பெயர் 'தென்னிந்திய பௌத்த சங்கம்' என பெயர் மாற்றப்பட்டது. பௌத்த சமய நடவடிக்கைகளுக்கு இச்சங்கமே மையமாயிற்று. பண்டிதர் தொடங்கிய பௌத்த சங்கத்தின் நோக்கம் சாதிபேதமின்மை, பூர்வீக திராவிடரை மேம்படுத்துதல், மதுமாமிசம் கைவிடுதல், பஞ்சசீலம் பெறுதல், அனைவரும் சமம். கடுமையான எதிர்ப்புக்கிடையில் பத்திரிகை மற்றும் சங்கத்தின் மூலமாக பௌத்த தன்மத்தை தமிழக பூர்வகுடியினரான சாதிபேதமற்ற திராவிடர்களின் சமயமாக கட்டி எழுப்ப அரும்பாடுபட்டார்.

'இதுவே சென்னைத் தலைமெய்ச் சபையோரின் அநுட்டானமாதலின் மற்ற தேசங்களில் ஆரம்பிக்கும் கிளைச் சபையோரும் இதனை அநுசரித்து தேச வசதிக்கும், மக்கள் சுகத்துக்குத் தக்கவாறு திருத்தி சங்க காரியாதிகளை நடத்திக் கொள்ளும்படி இதனைப் பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். சங்கத்தின் பெயர் – சென்னை சாக்கிய புத்த சங்கம்'

சாக்கைய புத்த சங்க மென்னும் பெயர் வந்த காரணம் – மணிமேகலையின் பொருளறியாதும் சரித்திர ஆதாரமின்றியும் பகவனுக்கு முன்பு சில புத்தர்கள் இருந்ததாகக் கூறுகின்றபடியால் அக்கூற்றிற்று இடந்தராது சரித்திர ஆதரவாலும் சிலோசாஷனங்களின் ஆதரவாலும் காணக்கூடிய சாக்கிய வம்மிவி வரிசையிற் தோன்றிய புத்தரே ஆதிபுத்தரென்பதை விளக்குவான் வேண்டி

இச்சங்கத்திற்கு சாக்கைய புத்த சங்கம் என்னும் பெயரை அளித்துள்ளோம். சங்கத்தின் நோக்கம் – சாதி பேதமில்லாத பூர்வீக திராவிடாள் புத்த தன்மத்தைச் சார்ந்தே நாளதுவரையில் சாதிபேதம் இல்லாதிருந்தபோதினும் குல குருவையும் குருவின் சரித்திரத்தையும் மறந்து தாய் தந்தையரை இழந்தப் பிள்ளைப்போல் நூதனமாகத் தோன்றியுள்ளப் பல மதங்களைத் தாவித்தாவி பிடித்து சம்பாதிக்கும் பொருளை பொய்க் குருக்களுக்கு அளித்து பஞ்சபாதகத்திற்கு உள்ளாவதுடன் நூதன சாதிபேதங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ள சத்துருக்களாலும் நிலைகுலைந்தும் பாழ்பட்டு வருகின்றபடியால் இவர்களது பூர்வ சரித்திரங்களையும், நீதிநெறி ஒழுக்கங்களையும் நன்கு விளக்கித் தெளிவுபெறச் செய்து அங்கங்கு சங்கங்கள் நிலைபெற்றவுடன் கல்வி சாலைகளையும், கைத்தொழிற்சாலைகளையும், விவசாய சாலைகளையும், வியாபார சாலைகளையும் ஏற்படுத்தி சகல விதத்திலும் முன்னேறச் செய்வதுடன் விவேக விருத்திப் பெற்றோர் சங்கத்து சமண முனிவர்களிடம் பொன்னாடை பெற்றுக் கரபோலேந்தி இராகத்துவேலி. மோகங்களை அகற்றி, அன்பு, ஈகை, சாந்தத்தைப் பெருக்கி என்றும் அழியா நித்தியானந்த நிலையாம் நிருவாணத்தைப் பெருவதற்கேயாம்.

(அயோத்திதாசர் சிந்தனைகள், ஞான அலாய்வியஸ், II, ப-178-179)

"ஒரு பைசாத் தமிழன் இதழ்"

தமிழ் இதழியல் வரலாற்றில் அயோத்திதாசரின் பங்களிப்பை அவர் தொடங்கிய "ஒரு பைசாத் தமிழன்" என்னும் வார இதழின் வழியே அறிய முடிகிறது. தமிழன் இதழ் பௌத்தக் கிளைகளை ஒருங்கிணைக்கும் தளமாகவும், அடித்தட்டு மக்களுக்கு அறிவு ரீதியான வழிகாட்டுதலைச் சுட்டுவதாகவும் அமைந்தது முதல் இதழ் நான்கு பங்கங்களுடன் அன்றைய காலணா விலையில் சென்னை இராயப்பேட்டையிலிருந்து புதன்கிழமை தோறும் 19.06.1907 முதல் வெளிவந்தது. 'ஒரு பைசாத் தமிழன்' என்று சற்று வித்தியாசமாகப் பெயர் சூட்டப்பட்டிருந்தாலும் பத்திரிகை "ஒரு கோடிப் பொன்" மதிப்பிற்குரியது என்பதை "தமிழ் வாழ்த்து" என்னும் கவிதையில் முதல் இதழிலேயே பின்வருமாறு குறிப்பிட்டார் அயோத்திதாசர்.

‘ஒரு பைசாத் தமிழனிவனு தவானென்பார்

ஒரு பைசாத் தமிழருமை யரியாமாந்தர்

ஒரு பைசாத் தமிழிலுண்மை யறிவாராயின்

ஒரு கோடிப் பென்னிஃதென் றுரைப்பர்மாதோ’

ஓராண்டிற்குப் பிறகு 26-8-1908 முதல் ‘ஒரு பைசா’ என்பது எடுக்கப்பெற்று‘தமிழன்’ எனப் பெயர் மாற்றம் பெற்றது. இந்தப் பெயர் மாற்றம் வாசகர்கள் பலர் வேண்டுகோளுக்கிணங்கச் செய்யப்பட்டது. பௌத்த தரும விளக்கமே, பத்திரிகையின் முதல் நோக்கம். இதில் பௌத்த சமயத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும், பிற தமிழ் இலக்கியச் செய்திகளையும் அணிவகுத்துக் காட்டியுள்ளார் இதழாசிரியர் அயோத்திதாசர். இப்பத்திரிகையை வாசிப்பதால் புராதன நூல்களின் கருத்துகளையும் எளிதிலறியலாகும் என ‘தமிழ்மாது’ என்னும் பத்திரிகையின் ஆசிரியர் கோ. ஸ்வப்பநேஸ்வரி சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்டாலின் ராஜாங்கம், தீண்டப்படாத நூல்கள், ப-59) இவருடைய ‘இந்து தேச பூர்வ பெண்களின் கல்வி’ என்னும் கட்டுரை ஒரு பைசாத் தமிழனில் வெளிவந்தது. “பூர்வத் தமிழ்மொழி” என்னும் தலைப்பில் பௌத்த தொடர் கட்டுரை கலையரங்கம் பகுதியாக என்பதும் குறிப்பிடத்தக்கது. வேத எதிர்ப்பு, பிராம்மணிய ஆதிக்க எதிர்ப்பு மூலம் அடித்தள மக்களின் மனக்குமுறர்களை வெளிப்படுத்துவதில் அயோத்திதாசர் முனைப்புடன் எழுதி வந்தார்.

**பூர்வத் தமிழொளி**

‘ஒரு பைசாத் தமிழன்’ தமிழன் இதழ்களில் வெளிவந்த ‘பூர்வத் தமிழொளி’ என்னும் கட்டுரைத் தொடர் தாசர் காலத்திலேயே 1912-ல் முதல் நூலாக வெளிவந்தது நூலிற்கு “பூர்வத் தமிழொளியாம் புத்தரது ஆதிவேதம்” என்னும் பெயரிடப்பட்டது. மொத்தப் பக்கங்கள் 303; கோலார் மாரிக்குப்பம் சாக்கைய பௌத்த சங்க வெளியீடு. இந்த நூலிற்கு எட்டுப் பக்கங்களில் “பாயிரம்” எழுதியுள்ளார். பௌத்த தரும ஆய்வில் ஆழ்ந்தகன்ற தமிழ் இலக்கியப் பரப்பை அயோத்திதாசர் தமது நோக்கத்திற்கு ஏற்பப் பயன்படுத்தியதையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"அருங்கலைச் செப்பு, அறநெறி தீபம், அறநெறிச்சாரம், திருக்குறள், திரிமந்திரம், திரிவாசகம, திரிகடுகம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி, சூளாமணி, நிகழ்காலத்திரங்கள் நிகண்டு, திவாகரம், பெருங்குறவஞ்சி, சிறுங் குறவஞ்சி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு மற்றுமுள்ள சமண முனிவர்களின் நூற்களைக் கொண்டும், புராதன பௌத்த விவேதிகள் கர்ண பரம்பரையாக வழங்கிவரும் சுருதிகளைக் கொண்டும், அநுபவச் செயல்களைக் கொண்டும் ஆராய்வதாயின் சத்திய தன்மம் நன்கு விளங்கும் . நாமும் அவற்றை ஆய்நதே பூர்வத் தமிழொளியான புத்தரது அரிய சரித்திரத்தையும் அவரது அரிய தன்மத்தையும் விளக்கி வரைந்திருக்கின்றோம்."

(அ.தா.சி. முதா, II, ப-186)

பொதுவாக பௌத்தம் மீதான கனிசமான இலக்கியப் படைப்புகள் இருந்த போதிலும், சமூக அடுக்குநிலை, சமத்துவமின்மை மற்றும் ஒழுங்குமுறை ஆகியவை தொடர்பான பௌத்தத்தின் போக்கு பற்றிய பிரச்சனையில் சில பத்தாண்டுக்கு முன்பு இருந்ததைவிட தற்போது அதன் புரியாத்தன்மை சற்று மட்டுமே குறைந்துள்ளது என்று கூறுவது மிகையானதல்ல. பௌத்தம் உருவான அரசியல் சூழல், பொருளாதார சமூக மற்றும் சமயச் சூழ்நிலையைப் பற்றிய சிறு பார்வையை இதுவரை கட்டுரையின் ஊடாக முன்வைத்திருந்தோம். இனி புத்தரின் சமூக தத்துவத்தின் வேரை இலக்கியங்களிலிருந்து பண்டிதர் எவ்வாறு வெளிக்கொணர்ந்தார், அவரின் உருவாக்கச் செயல் சாத்தியமானதை குறித்து பார்க்கலாம். 'புத்தரது ஆதிவேதம்' என்ற தலைப்பில் தமிழ்ன் இதழில் பண்டிதர் தொடர் கட்டுரையாக எழுதி வந்தார். சித்தார்த்தர் உற்பவக் காதை, சித்தார்த்தர் திருமணக் காதை, சித்தார்த்தர் வாய்மெ விசாரிணைக் காதை, சித்தார்த்தர் மகாராஜ துறைவு காதை, சித்தார்த்தர் பஞ்ச விந்தியத்தை வென்று இந்திரரும் மெய்கண்டு புத்தருமாய காதை, ஆதிவேத வாக்கிய விவரக்காதை, சதுர்சத்தியக் காதை, சங்கங்களின் ஸ்தாபனக் காதை, மானைக் காத்து மழுவேந்திய காதை, சதுரகிரிக்காதை, தந்தைக்கு மைந்தன் குருவாகிய காதை, புரத்துவாசருக்கு வியாதிக்குத்தக்க ஓடதிகளோதிய காதை, விசாகா காதை, குருவேத்திர காதை, தரும சக்கிர பிரவர்த்தன காதை, கோசல நாட்டரசன் காதை, கலக விவாத காதை, தந்தையின்

இரண்டாமுறை தரிசன காதை, சிகாள விசாரிணைக் காதை, மத்திம மதிபதா காதை, சதுர் பரமார்த்த காதை, கன்மகாதை, புக்கசாதி துறவு பூண்ட காதை, பிருமன் தரிசன காதை, மகாமங்கள காதை, உபதேச காதை, சுகவர்க்க காதை, பரிநிருவாண காதை, ஆதிவேத விளக்கம் (அ.தா.சி. II, ப-192) என 29 அத்தியாயங்களாக அமைந்த இந்நூலை பாலிமொழிப் பிரதிகளைக் கொண்டும், தமிழ்ப் பிரதிகளோடு, பரம்பரை சுருதி வாக்கியங்களைக் கொண்டும் எழுதினார். மேலும் தாம் எழுதும் பௌத்த நூல், அன்னியமதத்தார் எழுதிய பௌத்த நூல்களிலிருந்து மாறுபட்டேயிருக்கும் என்று எழுதிய தாசர் அதற்கான காரணங்களை வரிசைப்படுத்தியுள்ளார். அவை: பாலிமொழியிலிருந்து மொழிபெயர்த்ததால் ஏற்பட்ட பேதங்கள், செய்யுட்களிலிருந்து பொருள் பிரித்ததால் ஏற்பட்ட பேதங்கள், தேசத்துக்கு வந்த யாத்ரீகர்கள் எழுதியவற்றில் ஏற்பட்ட பேதங்கள்.

(அ.தா.சி. II, ப-186)

புத்தர் தாமே மொழிந்தவை என தாசர், திரிவேதவாக்கியங்கள், திரிபீடவாக்கியங்கள், திரிமந்திரவாக்கியங்கள், திரிசுருதி வாக்கியங்கள், ஆகியவற்றைக் குறிப்பிட்டார். இவற்றைத் தொகுத்து மொத்தமாக, ஆதி நூல், எழுதாக்கிளவி, ஆரணம், ஒத்து, சாகை, சுருதி, இருக்கு என்று ஏழு பெயரிட்டு பண்டிதர் குறிப்பிட்டார்.

பின்கலை நிகண்டு

ஆதிநூ லெழுதாக்கேள்வி யாரண மொத்துசாகை
யேதமில் சுருதிதன்னோடிருக்கிவை யேழும்வேதம்
வேதநூல் பொருள்னாமம் விதித்திடு ஞானபாகை
ஆதியாங் கருமபாகை அறுத்தபாகையுமாமென்ப
மெய்தெரி யாரணந்தான் வேதி தின் ஞானபாகை
மையலுட் பொருளினாம மற்றுப நிடகமென்ப
வைதிக வேமுற்ற மார்க்கமே பார்க்குங்காலை
பையமா லிருக்கினோடு பிடகமே யாதி வேதம்

(அ.தா.சி. II, ப-188)

திரிபேத – திரிபீட-, திரிமந்திர-, திரிசுருதி வாக்கியங்கள் என தாசர் கூறுபவை பாவம் செய்யாதே (இருக்கு கர்மபாகை - மெய் அளம்) நன்மை செய் (யசுர் – அர்த்தபாகை – உட்பொருள் நிலை) இதயத்தை சுத்தி செய் (சாமம் – ஞானபாகை – பேரின்ப நிலை)

பண்டிதர் ஆதிவேதத்தை ‘சித்தார்த்தர் விர்பவக்காதை’ முதல் ‘ஆதிவேத விளக்கம்’ வரை 29 அதிகாரங்களில் விவரித்துள்ளார். புத்த அவதாரத்தை தொடங்கு முன் பண்டிதர் அறுவகைச் சங்கத்தார்களின் கொள்கைகளைப் பற்றி அறிமுகப்படுத்துகிறார். பௌத்தத்திற்கு முன் நாட்டில் நிலவிய பண்பாட்டுப் பார்வையும், கொள்கைகளுமே இவை.

**முதலாவது சங்கம்:** பஞ்சபூதங்களை வணங்குவோர் சங்கம். இறப்பும் பிறப்பும், உயர்வு தாழ்வு, நன்மை தீமை எல்லாம் பஞ்சபூதங்களால் உண்டாவன என்பது இவர்கள் கொள்கை.

**இரண்டாவது சங்கம்:** இறந்த பின் மனிதன் மனிதனாகவும், மிருகம் மிருகமாகவும் பிறக்கும், இது மாறாது. எனவே எந்த ஒன்றையும் வணங்கிப் பயனில்லை. வணங்காவிடினும் பயனில்லை என்பது இதன் கொள்கை.

மூன்றாவது சங்கம்: மனிதனின் பிறப்பு என்பது தொடக்கம் (ஆதி) இறப்பு என்பது முடிவு (அந்தம்) இறந்தபின் சகலமும் சூனியம் எனவே சூனியத்தை விசாரிப்பதால் ஒரு சுகமுமில்லை என்பது இதன் கொள்கை.

நான்காம் சங்கம்: நடப்பன எல்லாம் தற்செயலே என்பது இதன் கொள்கை.

ஐந்தாம் சங்கம்: பசி, தாகம், அக்கினி, சூரிய வெப்பம் ஆகியவற்றைத் தாங்கி அடங்குபவன் எக்காலும் சுகம்பெறுவான், தாங்காதவன் சுகம் பெறமாட்டான் என்பது இதன் கொள்கை

(அ.தா.சி, II, ப-194)

சாக்கைய வம்சத்தாரின் ஆறாம் சங்கம்: இதுவே பௌத்த சங்கம் இதையடுத்து காலப்பாகுபாடு, நட்சத்திரம், ராசி, கிரகம் குறித்த சோதிடக் கணிப்பைப் பற்றி எழுதுகிறார். ஏழு கிழமைகள் ஒருவாரம் ஏழு வாரத்தில் 15 திதிகள், இரண்டு பட்சங்கள், இரண்டு பட்சங்களுக்கு முப்பது நாட்கள், முப்பது நாட்களில் தோன்றும் நட்சத்திரங்கள் 27, ராசிகள் 12 இவற்றில் தங்கும்

கிரகங்கள் ஒன்பது (வடவோட்டுக் கிரகங்கள் ஏழு இடவோட்டுக் கிரகங்கள் இரண்டு) மழை, வெயில், பணிக் காலங்கள் மூன்று கிரகங்களைச் சோதித்து கணித்து சோதிடம் பார்ப்பதில் வல்லவர் சாக்கையன் இவரது இயற்பெயர் கவியன். இவனே மகதநாட்டு மன்னன், பெயர் கலிவாகு. இவர் ஆண்ட காலத்தின் பெயர் கலிகாலம் இவர் பட்டத்துக்கு வந்தது முதல் கலியுக வருடம் ஆரம்பம். இவருக்குப் பின் வந்தவர்கள் ஒன்பது மன்னர்கள். இவர்களிலிருந்தே ஆறாம் சங்கத்தார் தோன்றினர்.

(அ.தா.சி. II, ப-194-195)

கலியன் கலிவாகு பட்டம் ஏற்றது முதல் நாட்டில் செழிப்ப, விளைச்சல், சூரியன் மேஷராசிக்கு வந்த அந்த மாதத்தை ஆண்டின் முதல் மாதமாகவும், சூரியன் மீனத்துக்கு வரும் மாதத்தை இறுதிமாதமாகவும் கொண்டு ஒரு வருடம் என வகுத்தார். இந்த முதல் வருடத்தைப் பாலி மொழியில் ‘பிரபவ வருசம்’ என்று கலிவாகு பெயரிட்டார். தொடர்ந்து விபவ, சுக்கில, பிரஜோத்பத்தி, ஆக்கிரீஸ்,... என்று பெயரிட்டார். அவர் ஆட்சிக்கு வந்த 60வது வருடத்தை அஷ்ய வருடம் என்று பெயரிட்டு இறந்தார். இப்படிச்சரித்திரத்தின் தொடக்கத்தில் வம்சாவளியை விவரிப்பது பௌராணிக்கு மரபாகும். பண்டிதர் இதனைப் பின்பற்றியுள்ளார்.

இந்தக் கலியுகம் 16/6-ல் சாக்கைய குல வீரவாகு வம்சவரிசையில் மணிமுகவாகு (சுத்தோதனன்) என்ற அரசனுக்கும் மாயாதேவிக்கும், சித்தார்த்தி வருடம், வைகாசி மாதம் 13ஆம் நாள் பௌர்ணமி திதி, கேட்டை நட்சத்திரம், மீனலக்னத்தில் ஆதிவாரம் அதிகாலையில் புத்தர் ஜனனம் நடந்தது. அக்காலத்தில் தேசமெங்கும் சிற்சில நற்குணங்கள் தோன்றி அதைக் கண்ட சிற்றரசர்களும், சோதியின் இடங்கண்டு குணங்கூறும் சோதிட சாஸ்திரங்களும் குழந்தையைக் காணும்படி வந்தார்கள். வந்தவர்களுள் அசித்தா என்னும் பெரியவர் தங்கள் மூதாதை கலிவாகு வகுத்துக் கூறிவந்த அங்கபாக லட்சணங்களைக் கொண்டு குழந்தையாக இருந்த புத்தரின் குணக் குறிகளை ஆராய்ந்து கூறினார்.

(அ.தா.சி. II, ப.195)

கௌதமருக்குப் பதினாறு வயதில் திருமணம் . இருபது வயதுக்கு மேல் புத்திர சந்தானம், பின்னர் துறவுபூண்டு வெளியேறி முப்பது வயதில் புத்தநிலை அடைந்தார். இவ்வாறு புத்தர் வெளியேறியதன் இலட்சியம், துக்கங்களின் உற்பவங்களைக் கண்டறிந்து சர்வசீவர்களும் நித்திய சுகம் பெறுவதற்கே வாரணாசியில் முதல் சங்கத்தை நிறுவினார். உயிர் வாழ்க்கையின் நான்கு பரிசுத்தங்களைக் கண்டறிந்தார். அவை, துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்.

துக்கம் பற்றுக்களால் வருவன அவை: பிறப்பு, பிணி, மூப்பு, மரணம் அநித்தியமானதெல்லாம் துக்கமே என்பது புத்தர் வாக்கு. எவனொருவன் தன்தேகத்தால் (ரூபஸ்கந்தம்), உணர்ச்சியால் (வேதனாஸ்கந்தம்), காட்சியால், அறுவகை இந்திரியங்களால் (காது, மூக்கு, நாவு, கண், தேகம், மனம்) உண்டாகும் உணர்ச்சிகளால் (சன்ஹாஸ்கந்தம்) ஆனந்தப்பெருகிறானோ, அவன் துக்கத்தில் ஆனந்தப்படுகிறான், அவனால் துக்கத்திலிருந்து தப்பமுடியாது.

(அ.தா.சி. II, ப.239)

துக்க உற்பத்தி கண்ணானது மனிதர்கள் சந்தோவிப்பிக்கச் செய்வதும், இன்பத்தைத் தருவதுமாக இருக்கின்றது. அவ்விடத்திலேயே அவா உதித்து எழுப்பி நிலைத்து வேரூன்றுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் இவைகளானது மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்கிறது இவை. அந்தந்த அவாக்களை நிலைநிறுத்துகிறது அவை, அறுவகை சேதனா இந்திரியங்களில் (உருவம், ஒலி, கந்தம், சுவை, ஸ்பரிசம், எண்ணம்) நிலைபெறுகின்றன. அறுவகை இந்திரியங்களின் பற்றுகளால் ஏற்படுகிற உணர்ச்சி ஆகியவற்றில் அவா நிலைபெறும் அறுவகைச் சேதனா இந்திரியங்களின் பேரிலுள்ள சிந்தனைகளும் நோக்கமும் மாந்தரைச் சுகப்படுத்தும் இவ்விடங்களில் அவாக்கள் நிலைபெறும்

(அ.தா.சி. II, ப.241)

துக்கம் உற்பத்தியாகும் முறைகளை 12 நிதானங்கள் என்று புத்தர் கூறினார். அவை பேதைமையிலிருந்து வினைகள் உண்டாகும். வினைகளிலிருந்து உணர்வுகள் உண்டாகும்.

உணர்ச்சியிலிருந்து அருவுரு உண்டாகும். அருவுருவிலிருந்து வாயில்கள் உண்டாகும், வாயில்களிலிருந்து ஊறு உண்டாகும், ஊறிலிருந்து நுகர்வு உண்டாகும், நுகர்விலிருந்து வேட்கை உண்டாகும். வேட்கையிலிருந்து பற்று உண்டாகும், பற்றிலிருந்து கருமக்கூட்டம் உண்டாகும், கருமக் கூட்டத்திலிருந்து பிறப்பு உண்டாகும், பிறப்பிலிருந்து வினைப்பயன்கள் உண்டாகும், வினைப் பயன்களே மூப்பு, பிணி, மரணம், அழுகை, துன்பம்.

(அ.தா.சி. II, ப.367)

**துக்க நிவாரணம்:**

புத்தரின் அட்டாங்கமார்க்கமே துக்க நிவாரணம் நல்ல காட்சி, சிந்தை, வசனம், செய்கை, வாழ்க்கை, ஊக்கம், கருத்து, அமைதி என்பவை அந்த எட்டு வழிகள் பற்றுக்களை அகற்றும்

‘சிரசை மொட்டையடிப்பதில் பயனென்ன?
தாடியைச் சிதைத்து விடுவதில் பயனென்ன?
மஞ்சளாடையைப் புனைவதில் பயனென்ன?
மனதிலுள்ள பற்றறுக்க வேண்டும்’

- புத்தர் (அ.தா.சி. II, ப.252)

துக்க நிவாரணமார்க்கம்: பௌத்த சங்கமே இதற்கான அமைப்பு சங்கத்தில் ஐந்து வகைப்பட்டவர்கள் உள்ளார்கள். உத்த மக்கள், விதரண மக்கள் (வெள்ளாடை உடுத்திய சிறுவர், சிறுமியர்) விஞ்ஞை மக்கள் (சாரணர் சித்தர்) ஐந்திர மக்கள் (அறஊத்துக்கள்)

(அ.தா.சி. II, ப.280)

இதைத் தொடர்ந்து அவா பற்று அகற்றி நல்வாழ்வு நடத்துவதற்காக புத்தர் போதித்த சில உபதேசங்களை பண்டிதர் எழுதுகிறார்.

நம்மிடமுள்ள காம அமக்கினியும், கோப அக்கினியும் விவிம் போன்றவை. இவை அகன்று, சாந்தம் அன்பு எனும் குளிர்ந்தநிலை பெருகி அமுதுண்ட கருணை அதிகரிக்க வேண்டும். விஷத்தை நீக்கி அமுதை நிரப்புங்கள்.

'நம்முடைய எண்ணங்களே நாமாயிருக்கின்றோம்

நம்முடைய எண்ணங்களே நமக்காதாரம்'

நம்முடைய எண்ணங்களால் நாம் அமைந்திருக்கின்றோம் - புத்தர் (அ.தா.சி. II, ப.289)

இதுவரை பண்டிதர் காட்டிய புத்தரின் உபதேசங்கள் ஒருவன் இந்த உலகில் தனக்கும் பிறருக்கும் இதமாக வாழுகின்ற நடைமுறை பற்றியனவாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே மானிட நல்வாழ்வுக்கு, அவனுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியைத் தொழுது கும்பிட்டு வழிபடுவதோ, பலியிடுவதோ, பக்தி செலுத்துவதோ கூறப்படவில்லை. தன்னைத்தானே ஒழுங்குப்படுத்துகின்ற மட்டுப் படுத்துகின்ற வழிமுறையே கூறப்படுகிறது.

தாசர் காலத்திலும், பின்பும் வாழ்ந்த பேராசிரியர் லட்சுமி நரசு வினைகளால் மறுபிறவி தொடரும் என்ற கருத்தை வேறுவிதமாக விளக்கினார். ஒருவனுடைய வினை, அவனது மனம், மொழி செயல் மூலம் ஏற்படுகின்றன. இந்த உருவாக்கத்தில் அவனுக்கும், அடுத்தவர்களுக்குமான உறவு சம்பந்தப்படுகிறது இயல்பு. தனிமனிதனின் கர்மாக்கள் (வினைகள்) பிறரிடம் செல்லுகின்றன. சேகரமாகின்றன. அவன் இறந்த பிறகுங்கூட அவனது வினைகள் பிறரிடம், அவனோடு உறவுகொண்டு பாதிக்கப்பட்டவர்களிடம் பேணப்படுகின்றன. இப்படித்தான் ஒருவனது வினை தொடர்கின்றது. இதுதான் காரண-காரியர் தொடர்ச்சி. எனவே ஒருவவன் இறக்கிறான் ஆனால் அவனது வினை மற்ற நபர்களிடம் மீண்டும் பிறக்கிறது. இந்த வினைத் தொடர்ச்சியில் ஓர் ஆன்மாவின் மறுபிறவிக்கு இடமில்லை. அதாவது இறந்த பின்னும் மனிதன் தனது வினைகளில் தொடர்ந்து வாழ்கிறான் நரசுவின் இந்த பௌத்த விளக்கத்தை பண்டிதர் விஞ்ஞானவாதமாகவே புரிந்திருந்தார். புத்தரின் போதனையிலுள்ள நவீனத்தன்மையும், பகுத்தறிவும், அற அடிப்படையும், சமத்துவ நிலைபாடும், பண்டிதருக்கு அவர் காலத்தில் ஒரு நிம்மதியை, பெருமிதத்தை, செயல்பாடுகளை செய்வதற்கான ஊக்கத்தை ஆக்கத்தை வழங்கியிருக்கும் என்பது தெளிவாகிறது. பௌத்தர்கள் என்றால் பகுத்தறிவாளலர்கள், கற்றவர்கள், ஒழுக்க சீலர்கள், உயிர் இரக்கமுள்ளவர்கள், மரணமிலாப் பெருவாழ்வை இலட்சியமாகக் கொண்டவர்கள், சாதிமத

பேதமற்றவர்கள் நவீனத்துவமானவர்கள், அறிவியலை வரவேற்பவர்கள், விடுதலையை ஏற்படுத்துபவர்கள் என்கிற பெறுமதிகள் பண்டிதரை ஈர்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

(க. அயோத்திதாசர் ஆய்வுகள், ராஜ் கௌதமன், ப-187-88)

**முடிவுரை**

பௌத்தத்திற்கும் தமிழகத்திற்குமான உறவு நெடியது. பௌத்தம் வட இந்தியாவில் தோன்றி செயற்பட்ட முறைக்கும் தென்னிந்தியாவில் தோன்றி செயற்பட்ட முறைக்கும் வேறுபாடு உண்டு. தமிழகத்தை பொறுத்தவரையில் அது பரவிய விதத்திலம், மறைந்த காலத்திலும் கூட வேறுபாடு உண்டு. நீண்ட காலம் முதற்கொண்டு தமிழகத்தில் தனித்தன்மையான வடிவத்தில் பௌத்தம் செயற்பட்டு வந்துள்ளன. பண்டிதர் வழிபாட்டு மையம், வழிபாட்டு முறைகள், பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சடங்குகள், பள்ளிகள், சுடுகாடு நளியான சமயநூல் என பௌத்தத்திற்கான வழிமுறைகளை தான் ஏற்படுத்திய சங்கங்களில் செயல்படுத்தினார். இந்த வழிமுறைகளை அவர் மரபான பௌத்தத்திலிருந்து எடுக்கவில்லை. ஏற்கனவே தமிழகத்தில் புழக்கத்திலிருந்த பண்பாட்டு அம்சங்களிலிருந்து எடுத்து புணரமைத்தார்.தமிழ் ஏட்டு இலக்கியங்களையும், வாய்மொழி வழக்குகளையும் சார்ந்து அமைந்த இவ்விளக்கங்கள் முற்றிலும் தமிழ்த்தன்மையோடு இருந்தன. எல்லாவற்றையும் விட பௌத்தத்தின் தொடர்பில் பிறந்த ஒன்றாகவே தமிழ் மொழியை விளக்கினார். தமிழ் மரபிலிருந்து பௌத்த விளக்கங்களை வழங்கிய தாசர் சமயம் என்பதற்கு தேவையான கதையாடல்களை மறுகண்டுபிடிப்பு செய்தார். சமூகக் குழுவொன்றை ஒருங்கிணைப்பதில் கதையாடல்களுக்கும், சடங்குகளுக்கும் உள்ள முக்கியத்துவத்தினை அவர் உணர்ந்திருந்தார். பௌத்த சமயத்துக்கு மாறுபவர்களுக்காக சமயச் சடங்கு முறையை நிர்ணயித்து வெளியிடுவது அம்பேத்கரின் நோக்கமாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கதையாடலர்களும், சடங்குகளும் சொல்லப்பட்ட இப்பௌத்தத்தில் சாதிபேதம் மறுப்பு மையமாக்கப்பட்டிருந்தது. புத்தர், நல்ல நடத்தை மட்டுமே நிரந்தர நன்மைக்கு நிரந்தரமான அடிப்படைக்கு உத்திரவாதம் ஆகுமென்றார். சமூக விளைவின் அடிப்படை நல்லவர்களை உருவாக்க வேண்டுமேயொழிய – வல்லவர்களை, சூழ்ச்சியாளர்களை அல்ல என்றார். ஒரு

மனிதரின் நிலை சூழ்நிலையில்தான் ஆளப்படுகிறதேயொழிய, பிறப்புரிமையில் ஆளப்படுவதில்லை என்றார். இந்தியத் துணைக் கண்டத்தில் பார்ப்பணியச் சமூக சூழ்நிலைமையில் மனித அந்தஸ்து, மனித வாழ்க்கை இழந்த வெகுமக்களுக்காகவே தன் சங்கத்தைத் தொடங்கினார். புத்தர், வர்ண – சாதியச் சமூக ஆதிக்க அமைபிற்கு எதிராகவும், சமத்துவத்திற்கான முன்னோடிகளில் எவருக்கும் முந்தியவராகவும் மிக முழுமையானவராகவும், மிக உறுதியானவராகவும் திகழ்ந்தார். ஆம் மனித இனத்தின் முதல் புரட்சியாளர் அவர். ஜாதிகள் அதன் காரணமான வேறுபாடுகள் பௌத்தத்தில் இல்லை. ஆண்-பெண் வேறுபாடு இல்லை, யார் வேண்டுமானாலும் துறவறம் ஏற்கலாம். ஞானமுதிர்ச்சியைப் பயிற்சி மூலம் பெறலாம். என்று சொல்லி, அதைத் தன் பௌத்த சங்கம் மூலம் நீச்சித்தும் காட்டிய முதல் சிந்தனையாளர், பகுத்திறவாளர் புத்தர் மட்டுமே.

**பயன்படுத்திய நூல்கள்**

1. அயோத்திதாசர் சிந்தனைகள் – I; (தொகுப்பாசிரியர். ஞான அலாய்சியஸ், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை : 1999)
2. அயோத்திதாசர் சிந்தனைகள் – I; (தொகுப்பாசிரியர். ஞான அலாய்சியஸ், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை : 1999)
3. அயோத்திதாசர் சிந்தனைகள் – III; (தொகுப்பாசிரியர். ஞான அலாய்சியஸ், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை : 1999)
4. பெ.சு. மணியின் கட்டுரைக் கொத்து – II; (பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்ன, 2005)
5. புத்தர் வசனம் (ஆங்கிலத்தில் எஸ். தமிமிகா, தமிழில் தி. சுகுணன், நாம் தமிழர் பதிப்பகம்)
6. க. அயோத்திதாசர் ஆய்வுகள் (ராஜ் கௌதமன், காலச்சுவடு வெளியீடு: 2012)
7. புத்தர் அருள் அறம் (ஜி. அப்பாதுரையார், பதிப்பாசிரியர் ஸ்டாலின் ராஜாங்கம், ஆழி வெளியீடு, 2008)

8. தமிழ் பௌத்தம் (ஆசிரியர். போதி தேவவரம், வெளியீடு, பாலம், 2012)
9. வைத்தியர் அயோத்திதாசர் – பௌத்தம், வைத்தியம் – தமிழ் (ஸ்டாலின் ராஜாங்கம், ஆழி வெளியீடு, 2021)
10. தீண்டப்படாத நூல்கள் (ஆசிரியர், ராஜாங்கம், ஆழி வெளியீடு, 2007)
11. வரலாற்றை மொழிதல் (ஆசிரியர் ஸ்டாலின் ராஜாங்கம், வெளியீடு, ஒரு பைசாத் தமிழன் பதிப்பகம், 2008)